(உ) யாதவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் செய்த போது அவர்களில் சிலர் கைது செய்யப் பட்டது குறித்து.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாதவர் மகாஜன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி என்னுடைய கவனத்திற்கு சில உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய கவனத்திற்கு திரு. சிங்காரம், திரு. ஞானசேகரன், திரு. பாலகிருஷ்ணன், திரு. தெய்வநாயகம், திரு. கண்ணன், திரு. அமர்நாத், திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றிய அறிவிப்பு, நான் அவைக்கு வந்ததற்குப் பிறகு சிலர் கொடுத்தது. அவைக்கு வருவதற்கு முன்பு சிலர் சொன்னார்கள். இது ஒரு சமுதாயத்தினுடைய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், (குறுக்கீடு) அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள், அதுபற்றி நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அரசு பதில் சொல்கிற வாய்ப்பை உண்டாக்கித்தான் செய்ய முடியும். (குறுக்கீடுகள்) சரி, அமருங்கள். இது பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிற திரு. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) திரு. சிங்காரம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) தங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். தினசரி பல பிரச்சினைகள் பற்றிப் பல உறுப்பினர்கள் கொடுக்கிறார்கள். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் விரிவாகப் போகாமல், கோரிக்கையை மட்டும் அரசாங்கத்திற்கு வைத்து, முடிக்கலாம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தமிழகம் முழுவதும் யாதவர் பெருமக்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக ஆயிரக் கணக்கானவர்கள் கைதாகி இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை அத்தனையும் நியாயமான கோரிக்கைகள். அவர்கள் 5 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற மிகப் பிற்பட்ட சமுதாயத்தில் தங்களையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பரம்பரையாக ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த அந்தச் சமுதாயம் இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களில் தங்களுக்கு முழுப் பங்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்போல சென்னை நகரம் போன்ற பெரிய நகரங்களில் பால் மாட்டை மட்டும் வைத்துக் கொண்டிருப்பவர்களை அந்த நகரங்களை விட்டே வெளியேற்ற வேண்டும் என்ற சட்டம் அரசிடம் இருக்கிறதோ என்ற கவலையோடு இருக்கிறார்கள். வாழ்க்கைப் பட்ட நல்ல கோரிக்கைகளை அவர்களுடைய கோரிக்கைகாக அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அந்தக் கோரிக்கை

களை ஏற்று, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கைதானவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தயவு செய்து அரசு உடனடியாக இதைக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். தங்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று யாதவர் பெருங்குடி மக்கள் நாடெங்கும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்புவது தவறில்லை. கோஷம் போடுவது கூட தவறில்லை. ஆர்ப்பாட்டம் நடத்துவது கூட தவறில்லை. ஆனால் மறியல் நடத்தி, சட்டத்திற்குப் புறம்பாகச் செல்கின்றபோது, வன்முறைகளில் ஈடுபடுகின்றபொழுது கைது செய்யப் படவேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்து, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர, கோரிக்கை வைப்பதில் தவறில்லை. கோரிக்கையை ஒருவர் வைத்து, ஆர்ப்பாட்டம் நடத்தினால். மறியல் நடத்தினால், உடனே அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட எல்லா வகுப்பினரும் கூட அதே கோரிக்கைகளைத்தான் வைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லா பிற்படுத்தப் பட்ட வகுப்பினரும் தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் ஷெட்யூல்ட் வகுப்பில் தங்களைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பிராமண மகாஜன சங்கத்தினர் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். செட்டிநாட்டு நகரத்தார் சங்கம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி பிள்ளைமார்கள் எல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். சைவச் செட்டியார்கள்

எல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள், தொண்டை மண்டல முதலியார்கள் எல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். தங்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றுதான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-00

கோரிக்கை வைப்பதை நான் ஒன்றும் சொல்லவில்லை. கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்ற முடியுமா, அதை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும், எப்போது நிறைவேற்ற முடியும் என்பது தனியாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. ஆக இப்போது அவர்கள் கோரிக்கை வைத்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் கைது செய்யப்படவில்லை. சட்டத்திற்குப் புறம்பாகவும், வேறு பல வகையிலேயும் நடந்ததற்காக அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி அரசு ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கும். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது சாதாரண வழக்குகள் இருந்தால் வழக்கம் போல ஈடுபடுகிற முயற்சியில் ஈடுபட்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் யாதவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தமிழகம் முழுவதும் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். மறியலில் ஈடுபட்டார்கள். எனவே கைது செய்யப்பட்டிருப்பதாக அவை முன்னவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் மறியலில் ஈடுபட்டாலும் கூட வன்முறையில் ஈடுபட்டதாகவோ அல்லது சட்டம், ஒழுங்கு கெடுகின்ற வகையில் எந்தவிதமான செயலில் ஈடுபட்டதாகவோ செய்திகள் இல்லை. எனவே அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வதோடு, அவர்களுடைய கோரிக்கைகளை, நியாயமான கோரிக்கைகளைப் பொறுத்த வரையில் பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.